2013 மே 7]

கூறிய அந்த இடம் சேலத்தின் மையப் பகுதியில் இருக்கிறது. அங்கே சுற்றுப்புறப் பகுதிகளுக்கு சென்று வருகின்றவர்களுக்கு இரு சக்கர வாகனம் நிறுத்துவதற்காக அந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாநகராட்சி சார்பாக அவ்விடத்தில் வணிக வளாகம் கட்டுகிறோம் என்று தீர்மானம் போட்டு, அதை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பவேண்டும். அது பெரிய அளவில் வருமானம் வரக்கூடிய ஓர் இடம்தான். நகரின் மையப் பகுதியில் 10,000 சதுர அடி உள்ள இடம். பல கோடி ரூபாய் மதிப்புள்ள இடம். அந்த இடத்தை மாநகராட்சியின் நிரந்தர சொத்தாகவும் உருவாக்கலாம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாநகராட்சிமூலம் தீர்மானத்தினை நிறைவேற்றி அங்கே எந்த மாதிரியான வணிக வளாகம் கட்டலாம் என்று மதிப்பீடு போட்டு அனுப்பினார் என்றால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 412, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

412—

மாம்பழக் கூழ் தொழிற்சாலை

***7116—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதியில் மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ராஜபாளையம் தொகுதியில் மாம்பழக் கூழ் தொழில் நிறுவனம் தொடங்குவது குறித்த கருத்துரு அரசின்

பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால் ராஜபாளையம் தொகுதியில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்க அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைந்த புகழால் பிரபஞ்சத்தில் உயர்ந்து நிற்கும் மாட்சிமை தங்கிய தமிழ்நாடு முதலமைச்சர், நாளைய பாரதப் பிரதமர், (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். விருதுநகர் மாவட்டத்தில் 2,950 ஹெக்டேர் நிலத்தில் மாம்பழம் சாகுபடி செய்யப்படுகிறது. அதிலே ராஜபாளையம் பகுதியிலே மட்டும், சுமார் 1,300 ஹெக்டேர் பரப்பளவில் மாம்பழம் சாகுபடி செய்யப்படுகிறது. அருகிலுள்ள மம்சாபுரம், வத்திராயிருப்பு பகுதிகளிலே மீதமுள்ள 1,650 ஹெக்டேர் நிலங்களில் மாம்பழம் சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு 2.47 மெட்ரிக் டன் மாம்பழம் சராசரியாக உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்தம் ஒரு வருடத்தில் ராஜபாளையம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மட்டும் சுமார் 7,000 மெட்ரிக் டன் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு ஆகிய மாவட்டங்களை அடுத்து விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் தொகுதியில் மாம்பழம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பங்கனப்பள்ளி, அல்போன்சா, பஞ்சவர்ணம் ஆகிய வகைகள் பழச்சாறு தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. சப்போட்டோ, பெங்களூரா போன்ற வகைகள், ஜெல்லி, ஜாம், ஊறுகாய் போன்ற வகைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ராஜபாளையம் பகுதியில் ஒரு மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.*

2013 மே 7]

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 2,956 ஹெக்டேர் நிலப்பரப்பில் மா பயிரிடப்படுகிறது. அந்த மாவட்டத்தில் 7,301 மெட்ரிக் டன் மா விளைச்சல் என்பது உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கிணங்க உண்மையான கருத்து என்றாலும்கூட, ராஜபாளையம் தொகுதியில் 729 ஹெக்டேர் நிலப்பரப்பில் மா பயிரிடப்பட்டு, அதன்மூலமாக ஆண்டிற்கு சுமார் 3,112 மெட்ரிக் டன் பழம் விளைச்சல் கொடுத்துக்கொண்டிருக்கிறது. என்றாலும்கூட, குறைந்தபட்சமாக ஒரு மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ரூபாய் 3 கோடி முதலீடு தேவைப்படுகிறது. இதற்கு முன்னால் ராஜபாளையம் பகுதியில், இந்தப் பழங்களைக் கொண்டு சாறு அதிகமாக வரக்கூடிய வாய்ப்பு இருந்தது என்பதால், விருதுநகர் மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்கெனவே துவங்கப்பட்டது. அந்தத் தொழிற்சாலைக்கு போதிய மா வரவுகள் இல்லை என்ற காரணத்தாலும், அதே நேரத்தில் பொருளாதார ரீதியாக அது சரியாக வரவில்லை என்பதனாலும், அந்தப் பகுதியிலே துவங்கப்பட்ட அந்த ஒரு தொழிற்சாலையும் மூடப்பட்டது என்பதை நான் இந்த நேரத்தில் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

திரு. க. கோபால்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற இந்த காலத்திலே, இப்போது மாம்பழம் சாகுபடி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசு, ஊரகத் தொழில் பகுதிகளை முன்னேற்றம் செய்வதற்கு நிறைய திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து, செயல்படுத்தி வருகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவதொரு சிறப்புத் திட்டத்தின் மூலமாக எதிர்காலத்தில் அங்கே ஒரு தொழிற்சாலையைத் துவங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சிறுதொழில் மூலமாக பல்வேறு திட்டங்களையெல்லாம் இந்த இரண்டு ஆண்டுகாலங்களிலே செய்து கொண்டிருக்கிறது என்றாலும்கூட, அரசு தனிப்பட்ட முறையிலே அதைச் செய்வது கிடையாது. கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற மாவட்டங்களில்கூட, அங்கே அதிக அளவாக 1,05,000 மெட்ரிக் டன் மா விளைச்சல் உள்ளது. குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே 3,20,000 மெட்ரிக் டன் உற்பத்தி இருக்கிறது. அங்கே, 52 தனியார் ஆலைகளைத் துவக்கி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிறுவனங்களிலேயே பாதி நிறுவனங்கள் செயல்படமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதிக்கு ஆலை வேண்டுமென்று, தொகுதியினுடைய முன்னேற்றத்திற்காக பாடுபடக்கூடிய உறுப்பினர் அவர்கள் வேண்டுகோளாக வைத்திருப்பதற்கிணங்க, அங்கே தொழிலைச் செய்வதற்கு ஆர்வம் உள்ளவர்கள் முன்வருவார்களேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதுபற்றி பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 413, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

413—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***20748—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை ஒன்றியம், ஊத்துப்பட்டியிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்